# <u>செயற்குழுக் கூட்டம் (15-07-2023)</u>

இன்று நமது இயக்கப் பொதுச் செயலாளர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நமது தலைமையகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில், ஏழு செயற்குழு உறுப்பினர்களும், ஒரு உறுப்பினர் பார்வையாளராகவும் கலந்து கொண்டனர். இன்று நடை பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இயக்கத்தின் 2023ம்ஆண்டு ஜுன் மாத வரவு செலவு கணக்கு வாசிக்கப்பட்டது. வரவு செலவு கணக்கு சரிதானன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. நீதிமன்ற வாய்தா கேட்கும் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டி ஒரு வடிவு மனுவைத் தயாரிக்கும் நமது செயலாளர் (சட்டம்) திரு நஃபீஸ் அஹமத் அவர்களை விரைவில் தயாரிக்குமாறு இந்த செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

3. இவ்வருடம் நமது இயக்கத்தின் பொதுக்குழுக் கூட்டம் திருச்சியில் இம்மாதம் 30ம் தேதி நடைபெறுகிறது.

**இடம் : கூட்டஅரங்கம், திருச்சிராப்பள்ளி பல் நோக்கு சமூக பணிமையம் (TMSSS)**
**49K பாரதியார் சாலை, ஜென்னி ப்ளாசா எதிரில், கன்டோன்மென்ட்,**
**திருச்சி-620001.**

அனைவரும் கண்டிப்பாக வருகை தந்து சிறப்பிக்குமாறு செயற்குழு கேட்டுக்கொள்கிறது

4. மாநில செயற்குழு உறுப்பினர்கள் திருச்சியில் நடைபெறும் கூட்டத்தில் வந்து செல்ல , தொடர் வண்டியின் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதிக்குரிய கட்டணம் கொடுக்கப்படும்.

5. இப்பொதுக் குழுக் கூட்டம் நடத்த திருச்சி மாவட்டத் தலைவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். திருச்சியில் நடக்கும் நிகழ்ச்சிக்குத் தேவையான முன்னேற்பாடுகளுக்கு நமது பதிப்பகச் செயலாளர் திரு G கோவிந்தசாமியும், திருச்சி மாவட்ட நிதிச் செலாளர் திரு அரங்கராஜனும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். விழாவிற்குத் தேவையான பொருட்கள் மற்றும் ஆவணங்களை சென்னையிலிருந்து கொண்டு செல்ல கலை தொடர்புச் செயலாளர் திரு N சாந்தாராமும் , மேலாளர் திருமதி பாக்கிய லட்சுமியும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்

6. இறுதியில் பொது செயலாளர் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

ஒப்பம்

**வே கார்த்திகை ராஜன்**
**பொது செயலாளர்**